மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை

முயற்சியும் பயிற்சியும்
Try and Practice Scholarship

முயற்சியும் பயிற்சியும் கருத்தரங்கு – 03

வினாத்தாள் - i

நேரம்: 1மணித்தியாலம்

"முடியும் வரை முயற்சி செய்"

பரீட்சைக்கு தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள். உங்களுடைய பெயரையும் பாடசாலையையும் உங்களுக்கு வழங்கப்பட்ட சுட்டெண்ணையும் கீழே தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

பெயர்.....

பாடசாலை.....

சுட்டெண்.....

இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.

- ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகளை புள்ளிக்கோட்டில் எழுத சொல்லுமிடத்தில் விடையை எழுதுக.

விடைத்தாள் பரிட்சகர்களுக்கு மட்டும்

இறுதிப்புள்ளி	
பகுதி 1	
பகுதி 2	
மொத்தம்	



சீகிரியா

ஆசான்.க.கோபி

B.A (National Dip.in.Primary,Dip.in.IT, BED.primary honors ®)

தொடர்புகளுக்கு : 0755153610

மா.பாக்கியம் தேசிய கல்லூரி

நவோதயம் கல்வியகம்

www.kogi.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

join with ZooM Classes Gobi sir

பின்வரும் கவிதையின் துணையுடன் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1)

கழுத்தை நீட்டிக் கூவிடுமே
காலைப் பொழுதில் சிறகடித்தே
எழுந்திரு, விழித்திரு என்றதும்
எழுப்பித் தூக்கம் ஓட்டிடுமே

1) 2) 3)





2)


பாலைக் குடித்தும் சாதுவைப் போல்
பிஞ்சக் காலால் நடந்திடுமே
வேலை அதற்கு வேறில்லை
வீட்டில் எலிகள் பிடிப்பதுதான்


1) 2) 3)





03. வேறுபட்ட உருவின் கீழ் கோடிடுக.





1) 2) 3)


04. பின்வரும் உருவில் சரியாக செங்கோணத்தில் காட்டும் கடிகாரத்தை தெரிவு செய்க.





1) 2) 3)

05. பின்வரும் உருவில் சரியான பின்னத்தின் கீழ் கோடிடுக.




1) 4/5
2) 2/5
3) 3/5

www.ikeda.lk

join with ZooM Classes Gobi sir

06. பின்வரும் கோலத்தில் அடுத்து வரும் எண்ணிக்கையை தெரிவு செய்க?




1) 25 2) 16 3) 36

07. ஒரு லீப்வருடத்தில் பெப்ரவரி 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின் அவ்வருடத்தில் மார்ச் முதலாம் திகதி என்னக் கிழமை?

1) வெள்ளிக்கிழமை
2) சனிக்கிழமை
3) ஞாயிற்றுக்கிழமை

08. இவ்வுருவில் **B** இனால் காட்டப்படும் கோணம்?



1) செங்கோணத்திற்கு சமன்
2) செங்கோணத்தை விட கூடியது
3) செங்கோணத்தை விட குறைந்தது.

09. பொருட்களை ஏற்றிக் கொண்டு ஓர் இடத்திலிருந்து புறப்பட்ட பாரவூர்திகள் ஆறு மணித்தியாலங்களில் 300 கிலோமீற்றர் தூரத்தைச் சென்றடைந்தது. 300 கிலோமீற்றர் தூரத்தை கடக்க ஒரு பாரவூர்திக்கு எவ்வளவு நேரம் எடுத்திருக்கும்?

1) 300 மணித்தியாலம் 2) 6 மணித்தியாலம் 3) 6 நிமிடங்கள்

10. **A** பெட்டியில் 7 பந்துகளும் **B** பெட்டியில் 9 பந்துகளும் உள்ளன. **A** பெட்டியிலிந்து **B** பெட்டிக்கு 3 பந்துகள் இடப்பட்டது. தற்போது **B** பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை **A** பெட்டியிலுள்ள பந்துகளின் எண்ணிக்கையை போல எத்தனை மடங்காகும்?

1) ஐந்து மடங்கு 2) நான்கு மடங்கு 3) மூன்று மடங்கு

11. என்னிடம் ஒரேயளவான நீளத்திலான 25 கம்பித்துண்டுகள் இருந்தன. நான் அக்கம்பித் துண்டுகளினால் சதுரமுகியொன்றையும், நான்முகியொன்றையும் அமைத்தேன் அதன்படி என்னிடம் மீதியாகவுள்ள கம்பித்துண்டுகளின் எண்ணிக்கை யாது?

1) 7 2) 5 3) 6

12. விமல், கமல், அமல், குமார் ஆகிய நால்வரின் வயதுகளின் தற்போதைய வயதுகளின் கூட்டுத்தொகை 34 வருடங்களாகும். இன்னும் எத்தனை வருடங்களில் நால்வரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 46 வருடங்களாகும்?

1) 2 வருடங்களில் 2) 4 வருடங்களில் 3) 3 வருடங்களில்

www.kegu.lk

join with ZooM Classes Gobi sir

13ம் 14ம் வினாக்களில் இடைவெளிக்கு வரவேண்டிய சரியான விடையை தெரிவு செய்து எழுதுக.

13. உழைக்கும் மக்கள் ..... பெறுமதிமிக்க ..... மதிக்கப்படுவர். இடைவெளிக்கு பொறுத்தமான சொற்கள் முறையே?

1) அனைவரும் - பணமாக
2) நாட்டின் - சொத்துக்களாக
3) வீட்டின் - செல்வந்தர்களாக

14. காசியப்பன் சீகிரியாவை ..... கொஞ்சும் குன்றாக .....

1) எழில் - மாற்றினான்
2) வடிவம் - தீட்டினான்
3) சித்திரம் - வரைந்தான்

15. தந்தையொருவர் தனது மகனுக்கு பணம் சேமிப்பதற்காக உண்டியல் ஒன்றை மகனுக்கு கொண்டு வந்து கொடுத்தார். மகன் அதில் ரூபாய் 125.00 ரூபா பணத்தை இட்டு அதில் ரூபாய் 35.00 ஐ எடுத்தான். அதன் பின்னர் மீண்டும் ரூபாய் 60.00 ஐ எடுத்து மேலும் ரூபாய் 200.00 ஐ உண்டியலில் இட்டான் அதன்படி உண்டியலில் உள்ள பணத்தின் மொத்த பெறுமதி யாது?

1) ரூபாய் 420.00 2) ரூபாய் 230.00 3) ரூபாய் 450.00

16. ஒரு பேருந்து 15வது கல்லில் இருந்து 23வது கிலோமீற்றர் கல்லைக் கடக்க 8 நிமிடங்கள் எடுத்தது. எனின் அப்பேருந்து அதே வேகத்தில் 45 வது கிலோமீற்றர் கல்லைக் கடக்க எவ்வளவு நேரம் எடுக்கும்?


1) 18 நிமிடங்கள் 2) 22 நிமிடங்கள் 3) 25 நிமிடங்கள்

17. 50 தொடக்கம் 105 வரை எண்ணும் எண்களை எழுதும் போது காணப்படும் இலக்கம் 5 எத்தனை தடவைகள் இடம்பெறும்?


1) 15 2) 17 3) 16



18. பின்வரும் உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?

1) 10 2) 20 3) 30



19. இது ஒரு உண்மையான தாயக்கட்டையாகும் குமார் இதனைக் கொண்டு ஒவ்வொரு நாளும் தனது நண்பர்களுடன் விளையாடுவான் ஒரு நாள் விளையாடும் போது அவன் இத்தாயக்கட்டையை சுழற்றி விட்டான் சுழற்றிய போது அவனிடம் கிடைக்கப்பெற்ற பக்கம் ●●● ஆகும் எனின் அப்பக்கத்திற்கு எதிராக காணப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை யாது?



1) 
2) 
3) 

www.tkeobi.lk

join with ZooM Classes Gobi sir

20. வரிசை ஒன்றில் 97 பேர் நிற்கின்றனர். அங்கு விமலன் நடுவில் நிற்கின்றான் எனின் அவன் எத்தனையாவதாக நிற்கின்றான்?

1) 45 வதாக நிற்கின்றான்
2) 50 வதாக நிற்கின்றான்
3) 49 வதாக நிற்கின்றான்

21. மைதானம் ஒன்றில் சிவப்பு, நீலம், நீலம், நீலம், பச்சை எனும் நிற ஒழுங்கில் கொடிகள் நடப்பட்டால் 95ஆவது கொடி என்ன நிறம்?

1) பச்சை நிறம்
2) சிவப்பு நிறம்
3) நீல நிறம்


22. சுவர்க்கடிகாரம் ஒன்று 6 மணிக்கு 6 மணிகளை அடிப்பதற்கு 5 செக்கன்கள் எடுக்கும் எனின் 12 மணிக்கு 12 மணிகளை அடிப்பதற்கு எடுக்கும் நேரம் எவ்வளவு?

1) 12 செக்கன்கள்
2) 11 செக்கன்கள்
3) 10 செக்கன்கள்

23. விமலா 4 மாலைகள் கட்டும் நேரத்தில் கமலா 3 மாலைகள் கட்டுவாள் இருவரும் 63 மாலைகளை கட்டினர் எனின் கமலா கட்டிய மாலைகள் எத்தனை?

1) 27 மாலைகள்
2) 36 மாலைகள்
3) 63 மாலைகள்

24. இந்த நான்கு அட்டைகளையும் ஒழுங்குபடுத்தும் போது இறங்குவரிசையாக அமையும் ஒழுங்கை தெரிவு செய்க.



1) 


2) 

3) 

www.ikeduk

join with ZooM Classes Gobi sir

☞பின்வரும் உருவின் துணையுடன் 25 தொடக்கம் 27 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.



25. இவ்ருவை முழுமையாக பூரப்படுத்தினால் கிடைக்கபெறும் சிறிய சதுரமுகிக்குற்றிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 27 2) 34 3) 56


26. இவ்வுருவை பூரணப்படுத்தாமல் காணப்படின் இதனை முழுவடிவமாக மாற்ற சேர்க்க வேண்டிய சிறிய சதுரமுகிக்குற்றிகளின் எண்ணிக்கை யாது?

1) 7 2) 8 3) 9

27. இவ்வடிவம் முழுமையாக்கப்பட்ட பின் முழுமையாக மை பூசப்பட்டு அதனை மீண்டும் சிறிய சதுரகுற்றியா வெட்டும் போது மூன்று பக்கங்கள் மாத்திரம் மை பூசப்பட்டு காணப்படும் சிறிய சதுரமுகிக் குற்றிகளின் எண்ணிக்கை யாது?

1) 12 2) 9 3) 8

☞சம்ஹான் தனது வீட்டில் இருந்து பாடசாலையை அடைந்த விதம் கீழ் வரும் படம் காட்டப்படுகின்றது. படத்தின் துணையுடன் 28 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு விடை தருக.



28. சம்ஹான் வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்கு எத்தனை தடவை வலப்பக்கமாக சென்றிருப்பார்?

1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 8 தடவைகள்

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

join with ZooM Classes Gobi sir

29. சம்ஹான் வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்கு எத்தனை தடவை இடப்பக்கமாக சென்றிருப்பார்?


1) 5 தடவைகள் 2) 6 தடவைகள் 3) 8 தடவைகள்

30. சம்ஹான் வீட்டிலிருந்து பாடசாலை செல்வதற்கு அதிக தடவை சென்றுள்ள திசை யாது?

1) வடக்கு 2) மேற்கு 3) கிழக்கு

31. குமார் **B** என்ற இடத்திலிருந்து ஓடுவதற்கு தயாராகுகின்றான். ஒரு தடவை ஓடி வந்தால் வட்டத்தின் சுற்றளவு 40m ஆக காணப்படும் அவன் 5 தடவை இதனை சுற்றி ஓடுகின்றான். எனின் அவன் முழுமையாக ஓடிய சுற்றளவு யாது?

1) 120m
2) 220m
3) 200m



32. **6m** சமஇடைவெளியில் வட்ட வடிவில் தூண்கள் நடப்பட்டுள்ளன. தூண்களுக்கிடையிலான மொத்த இடைவெளித்தூரம் **48m** எனின் அங்குள்ள தூண்கள் எத்தனை?

1) 6 தூண்கள் 2) 8 தூண்கள் 3) 12 தூண்கள்

33. இவ்வுருவில் வெறுமையான கட்டத்திற்கு வரவேண்டிய எண் யாது?

1) 44
2) 55
3) 33

1	2	4	5
3	6	15	6
10		24	7
11	12	9	8

34. 1965ம் ஆண்டு எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம்?

1) 20ம் நூற்றாண்டு 75ம் தசாப்தம்.
2) 20ம் நூற்றாண்டு 8ம் தசாப்தம்.
3) 20ம் நூற்றாண்டு 7ம் தசாப்தம்.

www.tkedu.lk

join with ZooM Classes Gobi sir

35. கல்விக் கண்காட்சி ஒன்று திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை நடைபெற்றது. கண்காட்சியைப் பார்வையிட திங்கட்கிழமை 1152 பேர் வந்திருந்தனர். அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் வந்தவர்களின் எண்ணிக்கை அதற்கு முதல்நாள் வந்தவர்களின் எண்ணிக்கையின் அரைவாசியாக இருந்தது எனின் வியாழன், சனி ஆகிய இரண்டு நாட்களும் வந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 180 பேர் 2) 576 பேர் 3) 455 பேர்

☞பின்வரும் வரிப்படத்தின் துணையுடன் 36 தொடக்கம் 38 வரையான வினாக்களுக்கு விடை தருக.

ரூபா600.00	ரூபா850.00	ரூபா1700.00
		

36. சிறிய கதிரையின் விலை யாது?

1) ரூபா 600.00 2) ரூபா 550.00 3) ரூபா 760.00

37. இரண்டு மேசையின் விலை யாது?

1) ரூபா 850.00 2) ரூபா 1700.00 3) ரூபா 600.00

38. குமார் கடைக்குச் சென்று பூச்சாடி, கதிரை, மேசை ஆகிய ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பொருளை வாங்கினார். எனின் அப்பொருளின் மொத்த பெறுமதி யாது?

1) ரூபா 3150.00 2) ரூபா 850.00 3) ரூபா 1700.00

☞பின்வரும் வாக்கியம் கருத்துள்ளதாக மாற்றுவதற்கு செய்யவேண்டிய மாற்றத்தை தெரிவு செய்க.

39. காசோலை மாற்றுவதற்கு தபாலகம் செல்ல வேண்டும்

1) காசோலை என்பதனை காசுக்கட்டளை எனமாற்றுதல்
2) தபாலகம் என்பதனை கடை என மாற்றுதல்.
3) மாற்றுவதற்கு என்பதளை வைப்பிலிடுதல் என மாற்றுதல்.

40. குயிலின் கூட்டில் காகம் முட்டையிட்டது.

1) குயிலின் என்பதனை மயிலின் எனவும் காகம் என்பதனை மைனா எனவும் மாற்ற வேண்டும்
2) குயிலின் என்பதை காகத்தின் எனவும் காகம் என்பதை குயில் எனவும் மாற்றுதல்.
3) குயிலின் என்பதை கிளியின் எனவும் காகம் என்பதை குளவி எனவும் மாற்றுதல்.

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை

முயற்சியும் பயிற்சியும்
Try and Practice Scholarship

முயற்சியும் பயிற்சியும் கருத்தரங்கு – 03

வினாத்தாள் - ii

நேரம்: 1 மணி 15 நிமிடம்

"தினம் தோறும் பயிற்சி செய்"

பரீட்சைக்கு தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள். உங்களுடைய பெயரையும் பாடசாலையையும் உங்களுக்கு வழங்கப்பட்ட சுட்டெண்ணையும் கீழே தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

பெயர்.....

பாடசாலை.....

சுட்டெண்.....

இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக. (சில வினாக்களுக்கு உபபகுதிகள் உள்ளன)

- 4 விடைகள் தரப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.

விடைத்தாள் பரிட்சகர்களுக்கு மட்டும்

இறுதிப்புள்ளி	
பகுதி 1	
பகுதி 2	
மொத்தம்	



தலதா மாளிகை

ஆசான்.க.கோபி

B.A (National Dip.in.Primary,Dip.in.IT, BED.primary honors ®)

தொடர்புகளுக்கு : 0755153610

மா.பாக்கியம் தேசிய கல்லூரி

நவோதயம் கல்வியகம்

www.ikeduk

join with ZooM Classes Gobi sir

01. பின்வரும் பந்தியின் துணையுடன் விடை தருக.

கண்சிமிட்டி மலரும் கமல மலர்களும் இதர மலர்களும் ''தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல்'' போல இதழ் விரித்து மலர்கின்றன. மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒருபுறம், வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்துப் பறந்து திரியும் வண்ணத்துப்பூச்சிகள் மறுபுறம். இவை சிறுவர்களைப் போன்று பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

பச்சைப் பட்டாடை விரித்தாற் போல் காட்சி தரும் வயல்வெளிகளும் புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்குத் தலை அசைக்கின்றன. சில்லென வீசும் புதுத்தென்றல் புத்துணர்ச்சியூட்ட பசுக்களும் தாய்ப் பசுவை முட்டி, மோதி முந்திக்கொண்டு துள்ளிக் குதித்தோடும் பசுக் கன்றுகளும் புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றன.

1) இப்பந்தியில் உள்ள உவமை அணிகளை எழுதுக?

.....

.....

2) சிரிப்பு என்பதற்கான ஒத்தச் சொல்லை தெரிந்து எழுதுக?.....

3) படர்க்கை பன்மைச் சொல்லை கண்டுபிடித்து எழுதுக?.....

4) சிறுவர்களையும், பெரியவர்களையும் பரவசமடைய செய்வது எவை?.....

5) காற்று என்பதன் ஒத்த பதம்?.....

6) வயல்வெளி எவ்வாறு காட்சித் தருகின்றன?.....

02.1) காலப் பெயரைக் காட்டும் சரியான சொல் எது?
1) கோடை 2) பட்டம் 3) கதிர்காமம்

2) இடப் பெயரைக் குறிக்கும் சரியான சொல்?
1) கார்த்திகை 2) கிளைகள் 3) வவுனியா

www.ikeoi.lk

join with ZooM Classes Gobi sir

03. தீவிரமாக / அதிகரித்து / உள்ளது / கொரோனா / உலகில் / நோய்

.....

04. அடைப்புக்குறிக்குள் உள்ள சரியான சொற்களை கொண்டு இடைவெளியை நிரப்புக.

1) சூரியனது.....உட்புகாத மரங்கள் அடர்ந்த காடு அது (ஒளி, ஒலி, ஒழி)

2) பாடசாலையின் முதலாவது மணி.....சில நிமிடங்களின் முன்னர் கேட்டது. (ஒளி, ஒலி, ஒழி)

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது பழமொழியாகும்

06. 1) பின்வரும் பழமொழியை பூரணப்படுத்துக.

உப்பிட்டவரை.....நினை

2) பின்வரும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான பழமொழியை எழுதுக.

மனதிருப்தி.....

07. அடைப்புக் குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) நான் (வந்தேன், வந்தோம்)

2) நாம் (படிக்கிறேன், படிக்கிறோம்)

08. கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்கு பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை தெரிவு செய்க.

1) அகம் (மனை, புறம், இல்லம)

2) கோபம் (சினம், சீற்றம், சாந்தம்)

09. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1) வைத்தியர் உயர்திணை ஒருமைப் பெயர்ச்சொல்லாகும்.(.....)

2) வாகனங்கள் அ.றிணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும்.(.....)

10. பின்வரும் தொடர்மொழிக்கான கருத்தை எழுதுக.

1) ஒரே சமயத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தவன்.....

2) கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்கு முன் சரி பிழை பார்த்துத் திருத்தும் நிகழ்வு.....

www.lkedu.lk



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

join with ZooM Classes Gobi sir

11. பின்வரும் உவமை தொடருக்கான பொருளை தருக.

1) ஓட்டைக்குடத்தில் நீர் வார்த்தது போல.....

2) பசுத்தோல் போர்த்த புலிபோல.....

12. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ் கருத்தை எழுதுக.

1) **Postman**..... 2) **Hospital**.....

13. தரப்பட்டுள்ள ஒவ்வொருப் படத்திற்குமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் தருக.



.....



.....

14. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியமாக எழுதுக.

1) Is / my / This / Car.....

2) I am / to / hose / going.....

15. ஒரலோசுவ என்ற சொல்லுக்கான தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

16. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லும் விதத்தை தமிழில் எழுதுக.

வாருங்கள் இருங்கள்.....

☞பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) பின்வரும் எண்சட்டத்தில் உள்ள எண்ணிற்கு அடுத்துவரும் எண்ணை எழுதுக.



_____

2) பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

9002.....

www.ikedu.lk

join with ZooM Classes Gobi sir

3) பின்வரும் எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

4500, 1234, 3420, 2340.....

4) கட்டத்தில் உள்ள எல்லா எண்களையும் பயன்படுத்தி உருவாக்க கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

2,	5
9,	0


.....

5) பின்வரும் படத்தில் உள்ள மிட்டாய்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் தருக.....



6) ஒரு பாடசாலையில் 1346 பெண்பிள்ளைகளும் 1999 ஆண்பிள்ளைகளும் உள்ளன அங்குள்ள மொத்தப்பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?.....

7) இவ்வுருவில் ½ இற்கு நிழற்றுக.



8) 24 மணித்தியால கடிகாரத்தில் 15 : 30 என காட்டப்படும் போது 12 மணித்தியால கடிகாரம் காட்டும் நேரம் யாது?.....


9) 4560 ஐ 5 ஆல் வகுக்கும் போது பெறப்படும் விடை யாது?.....

10) ஒரு தொட்டியில் 1 லீற்றர் 300 மில்லி லீற்றர் நீரும் இன்னொரு தொட்டியில் 9 லீற்றர் 200 மில்லி லீற்றரும் இருந்தது. இரு பாத்திரங்களிலும் உள்ள வித்தியாசம் யாது?.....

11. பை ஒன்றில் 3kg 500g அரிசி இருந்தது அதில் மேலும் 1kg 200g அரிசி இடப்பட்டது. மொத்த அரிசியின் நிறை யாது?.....

12. கண்டியிலிந்து கம்பளைக்கான தூரம் 8km 300m ஆகும் கம்பளையிலிருத்து உலப்பனைக்கான தூரம் 7km 800m ஆகும் கண்டியிருந்து உலப்பனைக்கான மொத்த தூரம் யாது?.....


13. இவ்வுருவின் பெயரை எழுதுக.....



www.tkeGJ.lk

join with ZooM Classes Gobi sir

14. பின்வரும் வரைபின் துணையுடன் விடை தருக.



1) அதிகமானோர் விரும்பும் உணவு யாது?.....
2) குறைவானோர் விரும்பும் உணவு யாது?.....
3) தோசையை விட எத்தனை பேர் ரொட்டியை விரும்புகின்றனர்?.....
4) உணவை விரும்புவோரின் மொத்த தொகை யாது?.....

சரியான விடையின் கீழ் கோடிடுக.

01) தேசிய கீதத்தை இயற்றியவர்

1) அமரதேவா
2) ஆனந்த சமரகோன்
3) கன்னங்கரா

02) மரணத்தை ஏற்படுத்த கூடிய நோய் எது?

1) கொரோனா நோய் 2) வாந்திபேதி 3) வயிற்றோட்டம்

03. கூட்டமாக வாழும் பிராணிகளை தெரிவு செய்க.

1) நாய், கோழி 2) தேனீ, எறும்பு 3) தேனீ, பூனை

04. வௌவால் மரத்தில் எவ்வாறு தொங்கும்?

1) நேராக
2) மறைவாக
3) தழைகீழாக

www.lkedu.lk

join with ZooM Classes Gobi sir

05. பின்வரும் பூக்களில் ஒரிதல் பூவை தெரிவு செய்க.





1) 2) 3)

06. ஈருடக வாழி என்பதன் பொருள்?

1) நிலத்திலும் நீரிலும் வாழக்கூடிய அதே வேளை நீரினுள் தமது இனத்தை பெருக்குவது ஆகும்.

2) நிலத்திலே வாழக்கூடிய வாழிகள் ஈருடகவாழிகள் ஆகும்

3) நீரிலே வாழக்கூடிய யாவும் ஈருடகவாழிகள் ஆகும்

07. சமைக்கும் போது சுவைக்காக சேர்க்க கூடியது?

1) மிளகாய் தூள் 2) மஞ்சள் தூள் 3) ஏலம் கருவா

08. பின்வரும் உருவின் பெயரை தெரிவு செய்க.

1) ஈருருளி

2) தேர் செலுத்தி

3) வீதி செலுத்தி



09. தேசிய கொடியில் செம்மஞ்சள் நிறம் குறித்த நிற்பது?

1) தமிழர்கள் 2) முஸ்லிம்கள் 3) சிங்களவர்கள்

10. பின்வரும் சூரிய நமஸ்கார படிகளில் இரண்டு படிகளும் ஒன்றாக காணப்படுவது.

1) 1ம் படி 3ம் படி 2) 10ம் படி 8ம் படி 3) 10ம் படி 3ம் படி

11. காந்தம் ஒன்றில் காணப்படும் இரு நிறங்கள்?

1) நீலம், சிவப்பு 2) நீலம், மஞ்சள் 3) சிவப்பு, ஊதா

12. இலங்கையில் சுவர் ஓவியங்கள் உள்ள இடம்?

1) பன்வில 2) சீகிரியா 3) அம்பக்க

www.ikeou.lk

join with ZooM Classes Gobi sir

13. தற்போது அனைவரும் நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி கற்கும் செயலி

1) **Viber** 2) **Whatsapp** 3) **Zoom**

14. பூவில் அமுதம் பருக வரும் பிராணியை தெரிவு செய்க.

1) வண்ணத்துப்பூச்சி 2) எறும்பு 3) நுளம்பு

15. தாவர வளர்ச்சிக்கு அவசியமான காரணியாக அமைவது?

1) மணல் மண், நண்மண், அதிகவெப்பம்

2) சூரிய ஒளி, மண், நீர்

3) களிமண், மணல்மண், நீர்

16. தேசிய கொடியில் **A** என்ற எழுத்தினால் காட்டப்படுவது?

1) செம்மஞசள் நிறம் தமிழர்கள்

2) பச்சை நிறம் தமிழர்கள்

3) காவிநிறம் நிறம் தமிழர்கள்



17. தேசிய இலட்சினையில் தர்மச்சக்கரம் குறித்து நிற்பது எதனை?

1) தர்மமும் நீதியும்

2) சத்தியம் வாயடமையும்

3) தெய்வீகம் கருணை

18. பின்வரும் உருவில் ஒலியெலிப்பத்தடை என்ற உருவிற்கு பொருத்தமான படத்தை தெரிவு செய்க.



1)



2)



3)

www.lkgobi.lk

join with ZooM Classes Gobi sir

19. எமக்கு இலவசமாக கிடைக்கும் சேவை அல்லாதது.

1) கல்வி

2) வைத்தியம்

3) உணவு

20. மாணவர்களிடத்தே பொதுவாக வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்பு?

1) ஒற்றுமை பண்பு

2) விரோதம்

3) எதிர்ப்பு

21. பாடசாலை செல்லும் மாணவர்கள் தற்போதைய சூழலில் கட்டாயமாக அணிய வேண்டியது?

1) தலைகவசம்

2) ஏப்ரன்

3) முகக்கவசம்

22. வித்துக்களை பயன்படுத்தி செய்யும் ஆக்கமாக அழைக்கப்படுவது?

1) கொலாஜ்

2) அல்பனா

3) ஒரிகாமி

23. பாடசாலையில் காலைவேளையில் உடற்பயிற்சி செய்வதன் காரணம்?

1) உடல் சோம்பலை அகற்றி புத்துணர்ச்சிக்கு

2) ஒலிம்பிக்போட்டி செல்வதற்கு

3) உடல் நோய் அடைவதற்கு

24. வீட்டுத்தோட்டம் செய்வதனால் கிடைக்கும் நன்மையாக அமைவது?

1) சூழலுக்கு தீங்காக அமையும்.

2) வீட்டுச் சூழல் குளிர்ச்சியடையும்

3) காட்டு விலங்குகள் வீட்டுக்கு வருகை தருதல்

www.lkedu.lk

join with ZooM Classes Gobi sir

25. பின்வரும் சூரிய நமஸ்கார படி எத்தனையாவது என தெரிவு செய்க.



1) 5 ஆம் படி
2) 6 ஆம் படி
3) 7 ஆம் படி

26. தினமும் சுத்தமாக இருக்க செய்ய வேண்டியது?

1) தினமும் குளித்தல்
2) தினமும் விளையாடுதல்
3) தினமும் சிரித்தல்

27. **பள்ளிக்கூடம் செல்வதற்கு ஆசை வை! - தம்பி**
பாடங்களைப் படிப்பதற்கு ஆசை வை! இப்பாடல் எது தொடர்பானது?

1) விளையாட்டு
2) ஆசைவை
3) பாடசாலை

28. கடதாசி தொழிற்சாலை அமையப் பெற்றுள்ள இடமாக அமைவது?

1) வாழைச்சேனை, எம்பிலிபிட்டி
2) அம்பக்க, மாத்தளை
3) உருவெல

29. வடமாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டத்தை தெரிவு செய்க.

1) கண்டி
2) காலி
3) வவுனியா

30. பூக்களை வண்டினங்கள் நாடிவர காரணமாக அமைவது?

1) உணவை வீண்விரயம் செய்வதற்கு
2) தேன் குடிப்பதற்கு
3) கிளைகளை உடைப்பதற்கு

www.lkedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

join with ZooM Classes Gobi sir

" வீட்டுத் தோட்டம் செய்வதால் கிடைக்கும் அனுகூலம்" எனும் தலைப்பில் 3 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் 5 சொற்களுக்கு மேல் இடம் பெற வேண்டும். (எழுவாய் பயனிலைத் தொடர்புகள், எழுத்துக் கூட்டல்கள் என்பன சரியாக அமைதல் வேண்டும்)

.....

.....

.....

.....

.....

.....

www.lkedu.lk